# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2206/26 - 2020 දෙසැම්බර් මස 19 වැනි සෙනසුරාදා - 2020.12.19

*2206/26 ஆம் இலக்கம் – 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியினால் (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 2019 செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 2141/88 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின்மூலம் 2019 செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி தாபிக்கப்பட்ட “2019 ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்கள் தொடர்பாகப் புலனாய்வு செய்து விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையிடுதல் அல்லது தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின்” தற்காலப் பணிகளை நிறைவேற்றி அதன் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டிய 2020 மாச்சு மாதம் 20 ஆந் திகதி முடிவுறும் ஆறுமாத காலத்தை, சொல்லப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, 2020, மாச்சு மாதம் 17 ஆந் திகதிய 2167/5 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின்மூலம் 2020 செத்தெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை 06 மாதங்களுக்கும், மீண்டுமொருமுறை சொல்லப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு 2020, செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதிய 2191/45 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின்மூலம் 2020, திசெம்பர் 20 ஆந் திகதி வரை 03 மாதங்களுக்கும் நீடிக்கப்பட்டு, மீண்டுமொருமுறை சொல்லப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு 2020 திசெம்பர் மாதம் 20 ஆந் திகதியிலிருந்து 2021 சனவரி மாதம் 31 ஆம் திகதிவரை இத்தால் நீடிக்கின்றேன்.

**கோட்டாபய ராஜபக்ஷ,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01
2020, திசெம்பர் 18.


1A - G 33354 — 380 (2020/12)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.